**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 174 புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2011 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| 326 | சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 4,375,372,720 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 4,243,991,301 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா

7,839,034 இற்கும் ரூபா 86,383,935 இற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 11.4 சதவீத இடைவெளியில் காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 174 | புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 182,432,720 | 404,465,000 | 166,296,188 | 383,443,082 | 16,136,532 | 21,021,918 |
| 232 | சிறைச்சாலைகள் திணைக்களம் | 3,383,620,000 | 335,950,000 | 3,362,171,827 | 271,014,238 | 21,448,173 | 64,935,762 |
| 326 | சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 63,025,000 | 5,880,000 | 60,477,773 | 588,193 | 2,547,227 | 5,291,807 |
| | மொத்தம் | 3,629,077,720 | 746,295,000 | 3,588,945,788 | 655,045,513 | 40,131,932 | 91,249,487 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 17401 | 2,355,000 | 2,253,294 | 1,000,000 | 2,067,802 | 12,000,000 | 6,785,178 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 23201 | 125,600,000 | 124,007,897 | 95,000,000 | 119,255,567 | 422,000,000 | 329,268,234 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 32601 | 2,355,000 | 2,353,188 | 2,000,000 | 3,631,103 | 17,000,000 | 13,833,061 |

### 2.2.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் வர்த்தக முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

**(அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

சிறைச்சாலைகள் விவசாய நடவடிக்கைகளின் முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| திணைக்களம் | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 23202 | 120,000,000 | 104,653,689 | 135,000,000 | 98,542,963 | 30,000,000 | 65,592,414 |

**(ஆ) நிதி விளைவுகள்**

வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

**<u>நிதி விளைவுகள்</u>**

| விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கை | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|
| | | இலாபம் (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | இலாபம் (கருதுகோள் கட்டணம் அடங்கலாக) | இலாபம் (கருதுகோள் கட்டணம் நீங்கலாக) | இலாபம் (கருதுகோள் கட்டணம் அடங்கலாக) |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23202 | சிறைச்சாலை விவசாயம் மற்றும் நடவடிக்கைகள் | 39,427,871 | 1,873,986 | 39,666,949 | 15,687,296 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்கு

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 9,664,519 வரவு மீதி காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 6,660,318 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 3,004,201 |
| | 9,664,519 |

### 2.3.2 பொதுவைப்புக் கணக்கு

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 48,035,269 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **அமைச்சு/ திணைக்களம்** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
| --- | --- |
| | **ரூபா** |
| புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 32,044 |
| சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம் | 221,109 |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | 47,782,116 |
| | 48,035,269 |

## பகுதி II

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை**

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 174 – புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை.

புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 நவம்பர் 22 ஆந் திகதி புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் புனர்வாழ்வளிப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

இரண்டு செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 360,000 கூட்டுத்தொகையான மீண்டெழும் நிதி ஏற்பாடு முழுவதும், 03 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,050,000 கூட்டுத்தொகையான மூலதன நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்குரிய கொள்வனவுத் திட்டம் 2011 யூன் 07 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.5 செயலாற்றல்

அமைச்சினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் புனர்நிர்மாணம் செய்தல்.

(ii) மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்காக சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டங்களைத் திருத்துதல்.

(iii) சிறு குற்றங்களுக்கு தண்டணை பெறுபவர்களை சிறையில் அடைப்பதற்குப் பதிலாக சீர்திருத்த செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு சமூக சீர்திருத்த கட்டளைச் சட்டங்களைத் திருத்துதல்.

(iv) புனர்வாழ்வளிப்பு செயற்பாடுகளை காலத்தின் தேவையின் பிரகாரம் விரிவுபடுத்துவதற்கு 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனம் மற்றும் கைத்தொழில் புனருத்தாபன அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை திருத்துதல்.

இது தொடர்பாக சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் சமூக சீர்திருத்த அதிகாரச் சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சின் செயலாளரினால் 2013 சனவரி மாதம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.6 நட்டமும் இழப்பும்

2011 ஆம் ஆண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட விபத்துக்களை வெளிப்படுத்தாமல் அமைச்சின் ஜீப் வண்டி பழுதடைந்ததாகக் குறிப்பிடப்பட்டு ரூபா 88,000 தொகை செலவிடப்பட்டு முழுமையாக வர்ணம் பூசப்பட்டிருந்தது.

### 1.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 11 | 10 | 01 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 20 | 24 | - | 04 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப மட்டம் | 19 | 17 | 02 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 06 | 09 | - | 03 |
| | மொத்தம் | 58 | 61 | 04 | 07 |

சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 232 – சிறைச்சாலைகள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை.

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 திசெம்பர் 21 ஆந் திகதி சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணியிருக்காமை

திணைக்களத்தினால் நி.பி. 502(2) இன் பிரகாரம் பேணப்பட வேண்டிய நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிவரப்பட்டிராததுடன் நி.பி. 110 இன் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடும் உரிய படிவத்தில் பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 47,782,116 ஆக இருந்ததுடன் அதில் உள்ளடங்கியுள்ள கீழே குறிப்பிடப்படும் ரூபா 32,965,757 மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| வைப்புக் கணக்கு - பிணை | - | ரூபா 1,047,088 |
| வைப்புக் கணக்கு - கேள்வி | - | ரூபா 4,151,520 |
| நானாவித வைப்பு | - | ரூபா 27,767,149 |

**(இ) முற்பணக் கணக்கு**

(I) 23201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,161,154 ஆக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

மரணித்தல் மற்றும் சேவையை விட்டுச் சென்றமையினால் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த ரூபா 2,353,594 தொகையான நிலுவைக் கடன் மற்றும் முற்பண மீதிகள் காணப்பட்டதுடன் அத்தொகையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

வழங்கப்பட்ட முற்பணங்களின் தவணைப் பணத்தை செலுத்தி முடிப்பதற்கு முன் மீளவும் விழா முற்பணங்கள் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(II) சிறைச்சாலைகள் விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் முற்பணக் கணக்குகள்

* பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

| எல்லை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|
| செலவினம் | 120,000,000 | 104,653,689 | 15,346,311 |
| பெறுவனவு | 135,000,000 | 98,542,963 | (36,457,037) |
| வரவு மீதி | 30,000,000 | 65,592,414 | 35,592,414 |

* 23202 ஆம் விடய இலக்க சிறைச்சாலைகள் விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் முற்பணக் கணக்கில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 75,225,119 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) முன்னைய ஆண்டுகளின் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் தொடர்பாகவும் ஏனைய

சிபார்சுகள் தொடர்பாகவும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 528,043,610 ஆக காணப்பட்டதுடன் அதன் மீதான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிதிப்பிரமாணம் 2(1) | 397,750 | மஹர சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கியமையினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 397,750 தொகையான வருமானம் கிடைத்திருந்ததுடன் விளையாட்டு மைதானத்திலிருந்து உழைக்கப்படுகின்ற வருமானம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த வருமானம் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிலையான கட்டளை இல. 463 | | திணைக்களத்தின் நிலையான கட்டளையின் பிரகாரம் கைதி ஒருவரை விடுவிக்கும் போது கைதியின் சம்பளம் உள்ளடங்கலான தொகைகளைச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் | | |
| * | 3 ஆவது பந்தி | 2,771,839 | அரசாங்க நிதியங்களின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை வலுப்படுத்துவதற்கான உத்தேச வழிமுறைகள் தொடர்பான சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக திணைக்களத்தினால் பேணப்பட்டிருந்த நன்கொடை நிதியத்தில் உதவி வேலையின் அடிப்படையில் சேவையாற்றுகின்ற கைதியின் சம்பளத்தில் 10% படி பெறப்பட்டு நிதியம் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| * | 4.2 ஆம் பந்தி | 1,200,000 | இரண்டு சந்தர்ப்பங்களில் முறையான அங்கீகாரமின்றி நன்கொடை நிதியத்தின் பெயரில் இலங்கை வங்கியில் ரூபா 500,000 மற்றும் ரூபா 700,000 தொகைகள் என இரண்டு நிலையான வைப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தளுபொத்த தவறிழைத்த இளைஞர்களின் சீர்திருத்த நிலைய நிர்மாணத்திற்குத் தேவையான 10 வகையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 2011 யூலை மாதத்தின் போது ரூபா 466,720 தொகை செலுத்தப்பட்டிருந்தும் 2011 திசெம்பர் மாதம் வரையிலும் அந்த பொருட்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விபத்திற்குள்ளாகிய மஹர சிறைச்சாலையின் 62-4416 ஆம் இலக்க பஸ் வண்டியை பழுதுபார்ப்பதற்காக கடவத்தை இ.போ.சபை டிப்போவின் பொறியியலாளர்களினால் ரூபா 81,724 தொகையில் மதிப்பீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாகன பழுதுபார்த்தல் சேவைகளுக்காக திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத வேறொரு கராஜுக்கு ரூபா 187,360 தொகை செலுத்தப்பட்டு அந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டை விட ரூபா 105,636 தொகையான செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் பஸ்ஸின் எஞ்சிய பகுதியை பழுதுபார்த்து நிறம் பூசுவதற்காக மேலதிகமாக ரூபா 423,650 தொகை செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.7 மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்குத் தேவையான கபில நிற தோல்பாதணிகள் 2,782 சோடி வழங்கலுக்காக கூறுவிலைகள் கோரப்பட்டு பாதணி உற்பத்தியாளர், இறக்குமதியாளர், முகவர் தவிர்ந்த நிறுவனமொன்று வழங்குனராக கொள்வனவுச் சபையினால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டின் போது சந்தையில் காணப்படுகின்ற பாதணிகளின் விலை, அவைகளின் அளவின் பிரகாரம் கூறுவிலைகள் மாறுபடுதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தாமலும், பாதணி ஆலையில் குறிப்பிடப்பட்ட உற்பத்திப் பெயரைக் கூறுவிலைகளில் குறிப்பிடப்பிடுதல், பாதணிகளின் அளவுக்கேற்ப கூறுவிலைகளில் உள்ள மாற்றங்கள் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தாமலும் உரிய வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. சிறைச்சாலைகள் தலைமையகத்துவக் கிளைக்கு வழங்கப்பட்ட பாதணிப் பெட்டிகளை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது பாதணி உற்பத்தி வழங்கல் மற்றும் விற்பனை என்பவற்றை மேற்கொள்கின்ற உள்நாட்டுக் கம்பனியின் பெயருடன் பெட்டிகளில் பாதணிகள் பொதியிடப்பட்டிருந்ததுடன் தோல் பாதணிகள் சோடிகள் படி பொதியிடப்பட்டிருந்த பெட்டிகளில் அந்தக் கம்பனியின் வியாபரப் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

திணைக்களத்திற்கு பாதணிகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் அந்தக் கம்பனியின் முகவராக இல்லாதிருந்தமையும் கணக்காய்வின் போது மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

பாதணிகள் சோடிகள் படி பொதியிடப்பட்டு வழங்கப்பட்ட பெட்டிகளில் விலைகள் அழிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்டிருந்த விலைகளின் பிரகாரம் 5 தொடக்கம் 9 வரை அளவுகளான பாதணிச் சோடியின் விலை ரூபா 980 ஆகவும், 10 தொடக்கம் 13 வரையான அளவுகளிலான சோடியொன்றின் விலை ரூபா 1,070 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 980 தொகைப்படி குறிப்பிடப்பட்ட 2,216 பாதணிச் சோடிகளுக்காக ரூபா 2,171,458 தொகையும், ரூபா 1,070 படி குறிப்பிடப்பட்ட 566 சோடிகளுக்காக ரூபா 605,563 தொகையும் ஆக செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 2,777,022 ஆக இருந்தது. இருந்த போதிலும் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 2,782 பாதணிச் சோடிகளுக்காகவும் ஒன்றுக்கு ரூபா 1,528 படி ரூபா 4,250,896 தொகை 2011 யூன் 06 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தமையினால் ரூபா 1,473,874 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.8 நட்டமும் இழப்பும்

(அ) 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 1,526,101 தொகையான விபத்து தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2010 திசெம்பர் மாத மின்சாரப் பட்டியல் தீர்த்தல்களின் தாமதம் காரணமாக இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கு தாமதக் கட்டணமாக ரூபா 15,460 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 2.9 முகாமைத்துவ செயற்திறனின்மை

மஹர சிறைச்சாலையில் நாளாந்தம் அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை முறையான பிரகாரம் அகற்றப்படாமையின் காரணமாக எழுந்திருந்த பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அழிவடைகின்ற குப்பைகளை உபயோகித்து கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் தளமொன்றை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற ஒன்றிணைந்த செயற்திட்டமொன்று மஹர பிரதேச சபையுடன் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட இனங்காணப்படாத பெறுவனவுகளான ரூபா 90,107 தொகையினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிகத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 56 | 41 | 15 | - |
| ii. | மூன்றாம் மட்டம் | 5651 | 4770 | 881 | - |
| iii. | இரண்டாம் மட்டம் | 402 | 258 | 144 | - |
| iv. | ஆரம்ப மட்டம் | 252 | 224 | 28 | - |
| v. | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 12 | - | 12 |
| | மொத்தம் | 6361 | 5305 | 1068 | 12 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 1068 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 326 – சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை.

சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2012 நவம்பர் 21 ஆந் திகதி சமூக சீர்திருத்த ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 3.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சமூக அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

செலவின விடயம் ஒன்றின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் திணைக்களத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

விடய இல. 32601 இன் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 511,297 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2012 யூன் 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 04 | 01 | 03 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 113 | 93 | 20 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 131 | 61 | 70 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 11 | 04 | 07 | - |
| (v) | ஏனையோர் (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 22 | - | 22 |
| | மொத்தம் | 259 | 181 | 100 | 22 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 98 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 உள்ளகக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.